Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை.

மலர் I.] 1941-ம் ௵ ஜூலை ௴ 25உ, வெள்ளிக்கிழமை. [இதழ் 19

## வாரச் செய்திக் குறிப்புகள்.

### 1. ஜெர்மனியிலும், பிரிட்டனிலும், இதர இடங்களிலும் ஆகாய விமானப்போர்.

பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை அதி மும்முரமாகத் தாக்கும் முயற்சி ஆரம்பித்தவுடன் ஜெர்மனியிலும், ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகளிலும் உள்ள முக்கியமான பட்டணங்களை முதல் மூன்று வாரங்களில் எத்தனை தடவை தாக்கியிருக்கிறது என்பதைப் பற்றிய விவரங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. அவை பின்வருமாறு :—

ஜெர்மனியில் உள்ள பட்டணங்கள் :—பிரெமென் 9 ; வில்ஹெம் ஷேவன் 4 ; பிரெமென் ஹேவன் 3 ; வெகர்சாக் 1 ; கக்ஸ்ஹேவன் 1 ; எம்டன் 5 ; ஹாம்பர்க் 1 ; கலோன் 11 ; டசல்டார்ப் 11 ; டியூஸ்பர்க் 4 ; ஹனோவர் 1 ; ஓல்டன்பர்க் 3 ; அஸ்னப்ரக் 2 ; பில்பெல்ட் 2 ; எஸ்ஸென் 2 ; மாக்டிபர்க் 1 ; ரீன் 1 ; மன்ஸ்டர் 4 ; டார்ட்மண்ட் 1 ; மன்கன் கிளாட் பாச் 1 ; பிராங்பர்ட் 1 ; க்ரெபெல்ட் 1 ; ரீட் 1 ; ஹாம் 1 ; லாஞ 1.

ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகளில் உள்ள பட்டணங்கள் :—பொலாயின் 7 ; டங்கர்க் 4 ; ராட்டர்டம் 4 ; அஸ்டெண்ட் 1 ; ஷெர்பர்க் 4 ; பிரெஸ்ட் 4 ; லூஹேவர் 1 ; கலே 2 ; டென்ஹெல்டர் 3 ; டெர்ஷெலிங் 1 ; லோரியண்ட் 1 ; கிறிஸ்டியன் சாண்ட் 1 ; ஹாக்சண்ட் 2 ; ஹேசல்புரூக் 3 ; பெதூன் 4 ; காமின்ஸ் 2 ; லென்ஸ் 1 ; லைல் 5.

இவற்றில், பெரிய ரயில்வே ஜங்ஷனை ஹாம், இந்த வருஷ ஆரம்பத்திலிருந்து சுமார் 80 தடவைக்கு மேல், பிரிட்டிஷ் விமானப் படையால் தாக்கப்பட்டிருக்கிறது. இதே போல ஹாம்பர்க் 60 தடவைக்கு மேலும், கலோன் 55 தடவைக்குமேலும் தாக்கப்பட்டிருக்கின்றன.

பிரிட்டிஷ் விமானிகள் சுமார் 6,000 ஜெர்மன் விமானங்களையும், நேசதேசத்தார்கள் 1,500 ஜெர்மன் விமானங்களையும் சுட்டு வீழ்த்தியிருக்கிருர்களென்றும், இதனுல் 18,750 விமான ஓட்டிகளை ஜெர்மனி இழந்துவிட்டதென்றும், விமானங்களை அதிசீக்கிரம் தயார் செய்யலாம், ஆனல் விமான ஓட்டிகளைத் தயார்செய்வது அதிக கஷ்டமான காரியமென்றும், லண்டன் "டைம்ஸ்" பத்திரிகையின் விமான நிருபர் எழுதுகிருர்.

சென்ற வாரத்திய செய்திகளில், பிரிட்டிஷ் விமானப் படை, வழக்கம்போல, வடமேற்கு ஜெர்மனியில் சில முக்கியமான லட்சியங்களைத் தாக்கியிருப்பதாகத் தெரிகிறது. ஹாம்பர்க்கில் உள்ள தொழிற்சாலைப் பிரதேசங்களும், இதர லட்சியங்களும் வெடி குண்டுகளால் தாக்கப்பட்டன. பலோன் என்ற இடத்தில் உள்ள கப்பற் சாலைகளும், கப்பல் இறக்குமதிக் கட்டடங்களும் தாக்கப்பட்டன.

ராட்டர்டம் என்ற துறைமுகப் பட்டணத்தைப் பகல் நேரத்தில் பிரிட்டிஷ் விமானங்கள் தாக்கின. 4,000 டன் கப்பல்களும், அதற்கு மேற்பட்ட எடையுள்ள கப்டல்களும் அங்கு சேர்த்து வைக்கப்பட்டிருக்கிற செய்தி அறிந்ததும், உடனே ஒரு பலத்த ஆகாய விமானப்படை அனுப்பப்பட்டது. அப்படை மிக அதிகமான சேதத்தை உண்டாக்கியிருப்பதாக, பிரிட்டிஷ் விமான மந்திரி சபை அறிக்கை கூறுகிறது. 90,000-த்திலிருந்து 1,00,000 வரைக்கும் மொத்த எடையுள்ள 17 எதிரிக் கப்பல்கள் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டு பழுதாக்கப்பட்டன. இதல்லாமல், 40,000-த்திலிருந்து 45,000 டன் எடையுள்ள ஐந்து கப்பல்கள் மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டு, பிரயோசனமில்லாமல் செய்யப்பட்டன.

வடக்கு பிரான்சிலும், இங்கிலீஷ் கால்வாயிலும் நடந்த விமானப்போரில் 9 ஜெர்மன் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. இதில் 6 பிரிட்டிஷ் விமானங்கள் இழக்கப்பட்டன.

கலோனிலும், ரைன்லாந்து பிரதேசத்திலும் உள்ள தொழிற்சாலைப் பிரதேசங்கள் தாக்கப்பட்டன.

டங்கர்க் பட்டணத்துக்குக் கொஞ்ச தூரத்தில் இருந்த 6,000 டன் 'சப்ளை' கப்பலின்மேல் அநேக வெடிகுண்டுகள் போடப்பட்டன. மற்றெரு கப்பல் செயிண்ட் நாசேர் என்ற இடத்தில் பலமாகத் தாக்கப்பட்டது.

மேற்கு ஜெர்மனியும், வடக்கு பிரான்சும், பல விடங்களில் பிரிட்டிஷ் விமானங்களால் தாக்கப்பட்டன. ரைன்லாந்து பிரதேசத்தில் தாக்கியதன் பயனுக அது நெருப்புப்பிடித்துக்கொண்டு 100 மைல் தூரம் எரிந்தது. ராட்டர்டம் என்ற கப்பல்கட்டும் பட்டணம் தீப்பிடித்துக்கொண்டு எரிந்தது அதிக தூரத்திலிருந்து காணப்பட்டதாம். 100 மைலுக்கு அப்பால்திரும்பிப் போய்க்கொண்டிருந்த விமானங்கள் ராட்டர்டம் நெருப்பைப் பார்த்தனவாம். டென்மார்க்கின் கரையோரத்தில் ஜெர்மானியர்களின் ராணுவ முகாம்கள் தாக்கப்பட்டன.

ஜெர்மன் விமானங்கள் பிரிட்டனின் கிழக்குக் கரையோரத்தைக் கடுமையாகத் தாக்கின. பல வீடுகள், வர்த்தகக் கட்டடங்கள், கடைகள், இரண்டு தொழிற்சாலை கட்டடங்கள் சேதமாக்கப்பட்டன. விமானப்பாதுகாப்பு ஒதுக்கிடங்களில் வெடி குண்டுகள் விழுந்ததால், அநேகர் உயிரிழந்தார்கள். வடகிழக்கு இங்கிலாந்தில், ஹல் என்ற பட்டணத்தில் இந்தத் தாக்குதல் நேர்ந்தது.

தெற்குக் கரைப்பிரதேசத்தில் ஜெர்மன் விமானங்கள் பறந்தபோது, இரண்டு ஜெர்மன் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. மிட்லாண்டு பிரதேசத்தில் ஜெர்மன் விமானங்கள் இரண்டு இடங்களில் வெடி குண்டுகளைப் போட்டன. ஆனல் சேதமொன்றும் ஏற்படவில்லை.

கடைசியாக வெளிவந்த செய்திகளின் சுருக்கமாவது :—பிரிட்டிஷ் விமானப்படை ரைன்லாந்து பிரதேசத்தில், பிராங்பாட், மான்ஹீம் என்று இரண்டு இலட்சியங்களைத் தாக்கியது. மேற்கு ஜெர்மனியில் உள்ள இதர தொழிற்சாலைப் பிரதேசங்களும் தாக்கப்பட்டன. டங்கர்க், ராட்டர்டம், ஆஸ்டெண்டு, வடக்கு பிரான்சில் உள்ள விமானச்சாலைகள், சேர்போர்க், சீன்கரையிலுள்ள லூடிரெயிட் கப்பல்கட்டும் சாலைகள், முதலியவைகளும் தாக்கப்பட்டன. பிரிட்டிஷ் விமானத்தாக்குதல்கள் இன்னும் அதிகரிக்கப்படுமென்றும், ஜெர்மனி மேற்கு அரங்கத்தில் ஒரு பெரிய விமானப்படை வைத்திருக்கும்படி கட்டாயப்படுத்துவது ஒரு நோக்கமென்றும், விமான மந்திரி சர் ஆர்ச்சிபால்ட் சிங்கிளேர் காமன்ஸ் சபையில் கூறினர். சென்ற புதன்கிழமை இரவு, பிரிட்டனின் கிழக்கு கரையிலுள்ள இரண்டு பட்டணங்களின்மேல் ஜெர்மன் விமானங்கள் வெடி குண்டுகளைப்போட்டன.

### 2. ஆப்பிரிக்காவும் மத்தியதரைக் கடலும்.

லிபியாவிலுள்ள ஜெர்மன் துருப்புகளும், இத்தாலியத் துருப்புகளும் மிகவும் கஷ்டமான நிலைமையிலிருக்கின்றன என்று லண்டன் "டைம்ஸ்" ஸின் கெய்ரோ நிருபர் கூறுகிருர். அதற்குக் காரணம், எதிரித் துருப்புகளுக்காக வரும் 'சப்ளை' கப்பல்கள் பிரிட்டிஷ் சப்மரீன்களாலும், நாசகாரிகளாலும், ஆகாய விமானங்களாலும் தாக்கப்பட்டு முழுகடிக்கப்படுவதுதான். இதல்லாமல், லிபியா

வின் துறைமுகங்களையும், ஆகாய விமானச்சாலைகளை யும், பிரிட்டிஷ் விமானங்கள் தாக்கிக்கொண்டே யிருக்கின்றன. மத்தியதரைக் கடலில் அச்சு நாடு களுக்குள்ள கப்பல்கள் குறைந்துவிட்டன. பெரிய 'டாங்கி'கள், இதர யுத்த சாமான்கள் முதலியவை கொண்டுசெல்லும் கப்பல்கள் குறைந்துவிட்டதால், இனிமேல் அப்படிப்பட்ட சாமான்கள் வருவது சந் தேகமாயிருக்கிறது. திரிபோலி, பெங்காசி முதலிய கப்பல் தளங்கள் கடுமையாகப் பிரிட்டிஷ் வெடிகுண்டு களால் தாக்கப்பட்டதால், இந்த நிலைமை இன் னும் மோசமாக்கப்பட்டது. சென்ற மூன்று வாரங் களாக, பெங்காசி துறைமுகப்பட்டணம் தொடர்ந்து தாக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு இரவும் குறைந்த பட்சம் பத்து 'டன்' வெடிகுண்டுகள் அந்தத் துறைமுகத்தின்மேல் போடப்படுகின்றன. எதிரிகளின் பெரிய கப்பல்கள் பெங்காசித் துறை முகத்திற்குப் போய் சாமான்கள் இறக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதனால் மூன்றாம் தரத் துறைமுகங்களாகிய தர்னாவும், அபலோனியா வும், பெங்காசிக்குப் பதிலாக உபயோகப்படுத்தப் படுகின்றன. லிபியாவில் இருக்கும் அச்சுத் துருப்பு கள் மன அமைதியில்லாமல் இருக்கின்றன. பிரிட் டிஷ் துருப்புகள் அனுகூலமான நிலையில் இருக் கின்றன. மூன்று மாதங்களுக்கு முன்பு தோப் ரூக்கைச் சுலபமாக பிடித்துவிடலாம் என்று எண் ணிய அச்சுத் துருப்புகள் இப்போது தோப்ரூக்கைத் தாக்குவதற்குப் பயப்படுகின்றன. இதற்கு முன் அச்சுத் துருப்புகள் செய்த தாக்குதல்களில் அவை களுக்கு ஏராளமான நஷ்டம் ஏற்பட்டது. இனிமேல் அப்படிப்பட்ட நஷ்டத்தை அடைவதற்கு அவை களுக்கு விருப்பமுமில்லை, சக்தியுமில்லை. சென்ற வாரத்தில், தோப்ரூக்கைக் கைப்பற்றும் நோக்கத் தில் தூரத்திலிருந்து அச்சுத் துருப்புகள் சமயம் பார்த்துக்கொண்டு காத்திருந்தன. இரவு நிசப்த மாக இருந்தது. பிரிட்டிஷ் துருப்புகளும், இந்தியத் துருப்புகளும், மெதுவாக நகர்ந்து நகர்ந்து சென் றன. எதிரிகள் இருக்கும் இடத்திற்குப் போவ தற்கு, சில ஆயிர கஜங்கள் இடையில் இருந் தன. அதிக ஜாக்கிரதையுடன், சப்தமில்லாமல், நமது துருப்புகள் எதிரிகளுடைய இடத்தை அடைந்து, திடீரென்று கடுமையாகச் சுட ஆரம்பித் தன. எதிரித் துருப்புகளில் அநேகர் இறந்துவிட் டார்கள். மிகுதியாயிருந்தவர்கள் கைதிகளாகப் பிடிக்கப்பட்டு, கொண்டுவரப்பட்டார்கள். இந்தச் சண்டையில், பிரிட்டிஷ் துருப்புகளும், இந்தியத் துருப்புகளும் மெச்சத்தகுந்த திறமையும், தைரிய மும், மனவுறுதியும் உடல் வலிமையும் காட்டியிருக் கின்றன.

அம்பா அளகிச் சண்டையில் தைரியத்துடன் திறமை யாகப் போர் செய்த இரண்டு இந்திய சிப்பாய்களுக் குப் பாராட்டுச் சின்னங்கள் அளிக்கப்பட்டன. ஜமே தார் சாந்திகுல், ஹவில்தார் மீர்ஹசான் என்ற இந்த சிப்பாய்கள் இருவரும் எல்லைப்புற மாகாணப் படையைச் சேர்ந்தவர்கள்.

தோப்ரூக் பிரதேசத்தில் நேசதேசத் துருப்புகள் முன்னேறிச் சென்றிருக்கின்றன. எதிரிகளுக்குச் சிறிது நஷ்டம் விளைவிக்கப்பட்டது. நேசதேசத்தார் களுக்கு அவ்வளவு நஷ்டமில்லை. கிழக்காப்பிரிக்கா வில் ஜெனரல் கன்னிங்காமின் பட்டாளம் 20,000 காலாட்படைகளும் 68 பீரங்கிகளும்தான். இவைகள் 400 பீரங்கிகளையுடைய 1,70,000 இத்தாலியத் துருப்புகளை (இதில் 96,000 காலாட்படைகள்) தோற் கடித்தன என்று அறிவிக்கப்படுகிறது.

### 3. அமெரிக்காவும், அட்லாண்டிக் கடலும்.

ஒரு வருஷத்துக்குமுன் இருந்ததைவிட அமெ ரிக்கா இப்போது அதிக அபாயகரமான நிலைமையில் இருக்கிறதென்றும், ஆகையால் ராணுவச் சேவை காலத்தை ஒரு வருஷத்துக்குமேல் நீடிக்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறதென்றும், இப்போது நெருக்கடியான நிலைமையில் அமெரிக்கர்கள் இருக் கிறார்கள் என்றும், செய்யவேண்டிய காரியங்களை விரைவில் செய்யாவிட்டால் பின்னால் பெருந்தீங்கு நேருமென்றும், பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் அமெ ரிக்க சட்டசபைக்கு ஒரு அறிக்கை அனுப்பியிருக்கிறார். இந்த சமயத்தில் அமெரிக்கச் சேனைகளின் பலத் தைக் குறைக்கக்கூடாதென்றும், அமெரிக்க சட்ட சபை ராணுவச்சேவை காலத்தை நீடிக்காவிட்டால், இரண்டு மாதங்களில் அமெரிக்கத் தரைப்படை உடைந்துபோகுமென்றும், காலா காலத்தில் செய்ய வேண்டியவைகளை அவ்வப்போது செய்யவேண்டியது மிகவும் அவசியமென்றும், அவர் வற்புறுத்திக் கூறியிருக்கிறார்.

அமெரிக்கா ஜெர்மனிக்கு எதிராக உடனே நேர் முகமாகப் போர்தொடுக்கவேண்டும் என்ற அபிப்பி ராயத்தை மிஸ்டர் சாமுவேல் கிராப்டன் என்பவர் நியூயார்க் "போஸ்டு" பத்திரிகையில் வெளியிட் டிருக்கிறார்.

அமெரிக்கா பிரிட்டனுக்கு 42½ கோடி பவுன் கட னாகக் கொடுத்திருக்கிறதென்றும், வாடகை—கடன் சட்டத்திற்குமுன் பிரிட்டனுக்கு அனுப்பிய சாமான் கள் சம்பந்தமாக இந்தக் கடன் ஏற்பட்டதென்றும், இதற்கு நூற்றுக்கு 3 பவுன் வட்டியென்றும், கடனைப் பதினைந்து வருஷங்களுக்குள் கொடுத்துவிட வேண்டுமென்றும், பிரிட்டிஷ் பொக்கிஷ மந்திரி, சர் கிங்ஸ்லி வுட் காமன்ஸ் சபையில் அறிவித்தார். இந்தக் கடன் ஒப்பந்தம் சென்ற திங்கட்கிழமை கையெழுத்திடப்பட்டது.

அமெரிக்க அரசாங்க மந்திரி, மிஸ்டர் சம்னர் வெல்ஸ், நார்வேயின் ஸ்தானீகர் காரியாலயத்துக்கு முகப்புக் கல் நாட்டு விழா ஆற்றியபோது, யுத்தத் திற்குப் பிறகு அமெரிக்காவின லட்சியத்தைப்பற்றிக் குறிப்பிட்டார். நிரந்தரமான சமாதானம் உலகத் தில் இருக்கவேண்டுமானால், பொருளாதார சமத்துவ மும், யுத்த ஆயுத ஒழிப்பைக் காப்பாற்றும் வலிமை பொறுந்திய பல தேசங்களின் கூட்டுறவும் வேண்டு மென்று கூறினார்.

### 4. கிரீசும், இத்தாலியும்.

ஆர்தூரோ பெராரின் என்ற பிரபல இத்தாலிய ஆகாய விமானி, ஒரு விமான விபத்தில் இறந்து போனார். அவர் ஒரு புதிய இத்தாலிய விமானத் தில் பறந்து அதைப் பரீட்சை பார்க்கும்போது, அந்த விமானம் விழுந்து நாசமாய்விட்டது. 1926-ம் வரு ஷத்தில் இங்கிலாந்தில் ஷ்நீடர் பந்தயக்கேடயத்தை ஜெயித்த இத்தாலியப் பந்தயக் கோஷ்டியில் இவர் ஒருவர். 1928-ம் வருஷத்தில் இத்தாலியின் தலை நகராகிய ரோமில் இருந்து தென்னமெரிக்காவில் உள்ள பிரேசிலுக்கு விமானத்தில் பறந்து சென்ற தற்காக இவருக்கு ஒரு தங்கப்பதக்கம் பரிசளிக்கப் கப்பட்டது. அபிசீனியாவின் அதிபதியாயிருந்த அயோஸ்டா பிரபுவுக்கு பெராரின் விமானப் பயிற்சி சொல்லிக்கொடுத்தார்.

முசலோனி தன்னுடைய துருப்புகளைப் பார்வை யிடும்போது யாரோ கைத்துப்பாக்கியால் இரண்டு தடவை சுட்டதாக மாஸ்கோ ரேடியோ தெரிவித்தது. இது உண்மையல்ல என்று ரோம் ரேடியோ கூறு கிறது.

கிரீஸ் ரஷ்யாவுக்கு ஆதரவு காட்டுகிறது என்று கிரேக்க முதல் மந்திரி, மிஸ்டர் சூடாரஸ், தென் ஆப்பிரிக்காவுக்கு வந்த பிறகு அறிவித்திருக்கிறார். அவருடைய அறிக்கையை லண்டனிலுள்ள கிரேக்க ஸ்தானீகர் காரியாலயம் வெளியிட்டிருக்கிறது.

### 5. பால்கன்ஸ், துருக்கி, சிரியா முதலியன.

துருக்கிக்கும், ஜெர்மனிக்கும் ஒரு புதிய வியாபார ஒப்பந்த சம்பந்தமாக சில தகராறுகள் இருப்ப தாகத் தெரிகிறது. துருக்கி 2½ கோடி பவுனுக்குச் சில சாமான்கள் வாங்குவதென்றும், அந்தச் சாமான்களை கொடுப்பதற்கு ஜெர்மனி ஒன்று அல்லது இரண்டு வருஷக்கெடுவு கேட்கிறதென்றும், அதற்குத் துருக்கி சம்மதிக்கவில்லை யென்றும், முன்பு கூறப்பட்டது. இது சம்பந்தமாக ஜெர்மனி யின் வியாபாரத் தூதராக டாக்டர் கிளாடியஸ் என்பவர் அங்காராவுக்கு (துருக்கியின் தலை நகரம்) கூடிய சீக்கிரம் விஜயம் செய்வாரென்றும், அவர் அந்த ஒப்பந்தத்தை முடிவு செய்வாரென்றும் தெரிகிறது. இந்த வியாபார ஒப்பந்தம் வெளி உலகத்தில் அதிகப்படியான மதிப்பைப் பெறவேண் டும் என்ற நோக்கத்துடன்தான் டாக்டர் கிளாடியஸ் துருக்கிக்குப் போவதாகக் கூறப்படுகிறது.

துருக்கிக்கு விரோதமாகப் பல்கேரியாவில் ராணுவ முஸ்தீப்பு ஏற்பாடுகள் நடக்கின்றன. இதனால் ஜெர்மனியின் அடுத்த நோக்கம் துருக்கி என்று யூகிக்கப்படுகிறது.

சிரியா முழுவதையும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் துருப்புகள் கைப்பற்றிவிட்டன. துருக்கிக்கு அரு

காமையிலுள்ள சிரியாவின் எல்லையோரம் முழுவதும் பிரிட்டிஷார் ஆதிகத்தின்கீழ் வந்துவிட்டது. துருக்கியின் தெற்கு எல்லைக்கருகில் பிரிட்டிஷ் துருப்புகள் இருப்பதைக்குறித்து, துருக்கியிடம் ஜெர்மனி தன்னுடைய ஆட்சேபணையைத் தெரிவித்திருக்கிறதாம்.

ஜெனரல் சர் மெயிட்லாந்து வில்சன் சிரியா முழுவதையும் ராணுவச் சட்டத்தின்கீழ் கொண்டுவந்துவிட்டதாக அறிவித்திருக்கிறார். சந்தேகப்பட்ட ஜெர்மனியர்களும், இத்தாலியர்களும் கைது செய்யப்படுவார்கள்.

துருக்கியின் எல்லையைத் தாண்ட சில அர்மீனியர்கள் முயற்சி செய்தார்கள். அதைத் துருக்கித் துருப்புகள் தடுத்தும் அவர்கள் சுட்டார்கள். துருக்கித் துருப்புகள் திரும்பிச்சுட்டு, சிரியாவுக்குள் அர்மீனியர்களைத் துரத்திவிட்டன.

## 6. கப்பல் நிலைமை.

ஜூலைமீ 10உயோடு முடிவான 40 நாள்களில், அமெரிக்க கப்பற் சாலைகளில் ஒரு நாளைக்கு ஒரு கப்பலுக்கு அஸ்திவாரம் போடப்பட்டது என்று அமெரிக்கக் கப்பற்படை இலாகா அறிவிக்கிறது. மேற்குறித்த கால அளவில் 22 கப்பல்கள் கட்டிமுடித்து, கடலில் மிதக்க விடப்பட்டன. "சவுத் டகோடோ" என்ற பெரிய யுத்தக்கப்பல், இரண்டு நாசகாரிக் கப்பல்கள், ஒரு சப்மரீன், 7 அதிவேக 'மோட்டார் டார்பிடோ' படகுகள், முதலியவைகள் இதில் அடங்கியிருக்கின்றன.

"லேடி சாமர்ஸ்" என்ற பிரிட்டிஷ் துணைக்கப்பல் எதிரி சப்மரீன்களால் தாக்கப்பட்டு முழுகடிக்கப்பட்டது. அதிலுள்ளவர்கள் ஒரு ஸ்பானிஷ் கப்பலைச் சேர்ந்தவர்களால் தப்புவிக்கப்பட்டார்கள்.

## 7. தூரக் கிழக்கு அரங்கம்.

அரசகுமாரர் கோனேயியால் அமைக்கப்பட்ட புதிய மந்திரி சபையின் கொள்கையைப்பற்றி அதன் அயல் நாட்டு மந்திரியான அட்மிரல் தோயாடா பத்திரிகை நிருபர்களுக்கு விளக்கமாகக் கூறினார். ஜப்பானுடைய அயல்நாட்டு விஷயங்களில் அடிப்படையான கொள்கை மாறுதல் யாதொன்றும் இல்லை என்று அவர் தெரிவித்தார். ஆனால், அகில தேசீய நிலைமை நாளுக்குநாள் எப்படிச் செல்லுகிறதோ அதில் அந்தக் கொள்கை பொறுந்தும்படி நடந்துகொள்ளுவது அவசியமாக ஏற்படலாம் என்றும் கூறினார்.

அரசகுமாரர் கோனேயி அமைத்த மந்திரி சபையில முக்கியமான ஸ்தானங்களில் "மிதவாதிகள்" நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ரஷ்ய-ஜப்பான் நடுநிலைமை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட மிஸ்டர் மத்சூகாவுக்குப் புதிய மந்திரி சபையில் இடம் கொடுக்கப்படவில்லை. அவருக்குப் பதிலாக வர்த்தக மந்திரியாயிருந்த அட்மிரல் தோயாடா அயல்நாட்டு மந்திரியாக நியமிக்கப்பட்டார். "கவனித்துக் காத்திருக்கும்" மந்திரி சபை என்று புதிய மந்திரி சபையைக் கூறுகிறார்கள். ராணுவப்படையும், கப்பற்படையும் இச்சபையைப் பூரணமாக ஆதரிக்கிறதாகத் தெரிகிறது.

58,000 டன் மொத்த எடையுள்ள 13 எதிரிக் கப்பல்கள் பிரிட்டிஷ் விமானத் தாக்குதல்களினால் நாசமாக்கப்பட்டன. இதில் பாதி பிரெஞ்சுத் துறைமுகங்களிலும், ஹாலந்து துறைமுகங்களிலும் முழுகடிக்கப்பட்டன. மற்றவை மத்தியதரைக் கடலில் நாசமாக்கப்பட்டன. லூஹேவர் என்ற துறைமுகத்தில் 20,000 டன் மொத்த எடையுள்ள 6 எதிரிக் கப்பல்கள் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டு அழிக்கப்பட்டன. திரிபோலி துறைமுகத்துக் கருகில் ஒரு 7,000 டன் எதிரிக் கப்பல் தாக்கப்பட்டு தீயில் நாசமாய் விட்டது. 5,252 டன் எடையுள்ள ஒரு இத்தாலியக் கப்பல் நேபிள்ஸ் விரிகுடாவில் பிரிட்டிஷ் சப்மரீனால் தாக்கப்பட்டு முழுகடிக்கப்பட்டது.

ஜப்பானில் ராணுவ முஸ்தீப்பு ஏற்பாடுகள் ஒரு பெரிய அளவுக்கு நடைபெறுகின்றன. இண்டோ-சீனாவைப் பொறுத்தவரையில் ஜப்பான் ஏதோ செய்யப்போவதாகத் தெரிகிறது. இண்டோ-சீனாவைப்பற்றி ஜப்பான் பரிசுத்தமான எண்ணங்கொண்டிருக்கிறதென்று பிரிட்டிஷ் ஸ்தானீகர் சர் ராபர்ட் கிரெய்கியிடம் வற்புறுத்திக் கூறிய ஜப்பானிய அயல் நாட்டு உதவி மந்திரி தன் பதவியை விட்டு விலகிவிட்டார்.

மந்திரி சபை மாறினாலும், ஜப்பான் மூன்று வல்லரசுகளின் (ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான்) உடன்படிக்கையை அனுசரித்து நடக்கும் என்று ஜப்பானிய சமாச்சார நிலைய உதவி அதிகாரி கூறினார்.

இண்டோ-சீனாவில் ஜப்பானியத் துருப்புகள் பிரவேசிப்பதற்கு இணங்கவேண்டும்; இல்லாவிட்டால் போர் தொடங்கப்படும் என்று ஜப்பான் ஒரு 24 மணி நேர 'அல்டிமேடம்' (எச்சரிக்கை அறிவிப்பு) கொடுத்திருக்கிறது. இண்டோ–சீனா சம்பந்தமாக விஷி அரசாங்கமும் ஜப்பானும் ஒரு சமாதான ஏற்பாட்டிற்கு வந்திருப்பதாக வாஷிங்டனில் உள்ள ஜப்பானிய ஸ்தானீகர் காரியாலயம் கூறுகிறது.

ஜப்பான் சைபீரியாவின்மேல் கண்ணோட்டத்துடன் வேலை செய்கிறதென்றும், இண்டோ-சீனா விஷயம் அதை மறைப்பதற்கான முயற்சி என்றும், கூடிய சீக்கிரம் சைபீரியாவில் பிரவேசிக்க ஜப்பான் முயற்சி செய்யுமென்றும் ரஷ்ய வட்டாரங்கள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றன.

## 8. விஷி.

விஷி அரசாங்கம் ஹிட்லருடைய பயமுறுத்தலுக்கு இன்னும் அதிகமாகக் கீழ்ப்படிந்து நடக்கிறதென்பதற்கு முக்கியமான அத்தாட்சிகள் கிடைத்திருக்கின்றன. விஷி மந்திரி சபையில் பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன; மிஸ்டர் ஷான் அச்சார்டுக்குப் பதிலாக மிஸ்டர் பியர் காசியோ உணவு மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். மிஸ்டர் பியர் பூஷனுக்கு உள்நாட்டு மந்திரிபதவி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஜெர்மனிக்கு அனுகூலமான மிஸ்டர் பியர் பூஷனை நியமித்தது ஜெர்மனியை சந்தோஷப்படுத்துவதற்காகத்தான் என்று "பேஸ்லர் நகரிக்தன்" என்ற பத்திரிகையின் விஷி நிருபர் எழுதுகிறார். மார்ஷல் பீத்தானின் மந்திரி சபையைச் சேருவதற்குமுன், மிஸ்டர் பூஷன் ஜெர்மானியர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார்.

பிப்ரவரி மாதம் 25-தேதியிலிருந்து, ஜெர்மனிக்கு மிகவும் வேண்டியவரான அட்மிரல் தார்லான் உதவி முதல் மந்திரி பதவி, அயல் நாட்டு மந்திரி பதவி, கடற்படை மந்திரி பதவி, உள்நாட்டு மந்திரி பதவி, இவைகள் அனைத்தையும் தானே வகித்துவருகிறார். இதனால் பிரெஞ்சு அரசாங்கத்தின் கொள்கையையும், போக்கையும் புதிய முறையில் கொண்டுபோவதற்கு அவரால் முடிந்தது என்று விஷி சமாச்சார ஸ்தாபனம் கூறுகிறது.

## 9. ஜெர்மனி அதிக்கிரமித்த நாடுகள்.

ஜூலை மாதம் 20-ந் தேதி ஞாயிற்றுக்கிழமையை, ஜெர்மனி அதிக்கிரமித்த நாடுகளில் வெற்றி நாளாகக் கொண்டாட வேண்டுமென்று, கர்னல் பிரிட்டன் என்ற பிரிட்டிஷ் ரேடியோ பேச்சாளர் ஒரு வேண்டுகோள் விடுத்தார். "அன்றைய தினம், நாட்டு சுதந்தரத்துக்காகவும், நாஸிகளால் அடிமைப்படுத்தப்பட்ட நாடுகளின் சுதந்தரத்துக்காகவும் நடக்கும் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவோம் என்று முதலாவதாக, சத்தியம் செய்து கொள்ளவேண்டும். இரண்டாவதாக, சுவர்களிலும் இதர இடங்களிலும் "V" (வி) என்ற வெற்றி எழுத்தை எழுத வேண்டும். ஐரோப்பாவின் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலை வரைக்கும் "V" என்ற எழுத்து எங்குபார்த்தாலும் எழுதப்படவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். அதற்குமுன் அவர் பிரிட்டிஷ் முதல் மந்திரி, மிஸ்டர் சர்ச்சில், ஜெர்மனி அதிக்கிரமித்த நாடுகளுக்கு அனுப்பிய செய்தியைப் படித்தார். அந்தச் செய்தியாவது :—

"ஜெர்மனியால் அதிக்கிரமிக்கப்பட்ட நாடுகளின் தளராத மனவுறுதியின் அறிகுறிதான் "V" (வி) என்ற எழுத்து; நாஸிகளுடைய கொடுங்கோலாட்சியின் முடிவுகாலம் வருவதைக்காட்டும் முன்னெச்சரிக்கை அதுதான். ஐரோப்பாவிலுள்ள நாட்டு மக்கள் எதிரிகளுடன் யாதொரு தொடர்பும் வைத்துக் கொள்ளாமல் இருந்து வந்தால், எதிரிகள் தாமே அழிந்து போவார்கள். ஐரோப்பாவும் சுதந்தரம் பெறும்."

இந்த வேண்டுகோளின்படி ஐரோப்பாவின் பல பாகங்களிலும், ஐரோப்பாவுக்கு வெளியிலும், "V" தினக்கொண்டாட்டம் வெற்றிகரமாக நடந்தது. ஞாயிற்றுக்கிழமை (ஜூலை 20உ) இரவு 12-மணிக்கு கர்னல் பிரிட்டன் ரேடியோ மூலம் கூறியதாவது :—

"ஒரு வெற்றி நமக்குக் கிடைத்திருக்கிறது. நாஸி ஜெர்மனிக்கு விரோதமாக 'V' பட்டாளம் கிளம்பியிருப்பது ஒரு முழு வெற்றியாகும். நாம் எதிர்பார்த்ததுக்குமேல் அதிகமான அளவுக்கு 'V' இயக்கம் பலனடைந்திருக்கிறது. பிரம்மாண்டமான 'V' பட்டாளம் ஐரோப்பா முழுமையும் நிறைந்து நிற்கிறது. ஜெர்மானியர்கள் கலவரமும், பயமும் அடைந்திருக்கிறார்கள். அவர்களுக்கு என்னசெய்வதென்று தெரியவில்லை. 'V' பட்டாளம் கலக்கமில்லாமலும், நம்பிக்கையுடனும், பொறுமையுடனும் போர்க்கோலங்கொண்டு நிற்கிறது. யாதொரு தவறுகளும் நேரப்போவதில்லை. நமக்கு யாதொரு அவசரமுமில்லை."

"V" இயக்கம் பலம்பெற்று பொது மக்களின் ஆதரவை அடைந்துவருவதைக்கண்ட ஜெர்மன் பிரசார மந்திரி டாக்டர் கோப்பல்ஸ் அதை ஜெர்மனியின் வெற்றிக்குறியென்றும், அதைப் பொது மக்கள் ஆவலுடன் எழுத்துகள் மூலமாகவும், கொடிகள் மூலமாகவும் காட்டுகிறார்களென்றும் ரேடியோ பிரசாரம் செய்கிறார்!

"V" நாள் கொண்டாட்டம் அமெரிக்கா, தென்னமெரிக்கா, ஆப்பிரிக்கா, துருக்கி முதலிய நாடுகளிலும் கொண்டாடப்பட்டது.

தென் கிழக்கு ஐரோப்பாவில் ஜெர்மானியர்களுக்கு பல தொந்தரவுகள் கொடுக்கப்பட்டுவருகின்றன. ஆதன்ஸ் நகரத்தில் (கிரீசின் தலைநகரம்) இருந்த விமான எதிர்ப்பு பீரங்கிப்படையைச் சேர்ந்த ஜெர்மானியர்களுக்கும், இத்தாலியர்களுக்கும் பெருத்த சண்டை நடந்தது. சண்டையில் அநேகர் காயப்படுத்தப்பட்டார்கள். காயம்பட்டவர்கள் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டார்கள்.

ஜெர்மானியர்களுக்கும், பல்கேரியர்களுக்கும் சோபியாவில் (பல்கேரியாவின் தலைநகரம்) தெருச் சண்டைகள் நடைபெறுகின்றன. தங்களுடைய நாட்டு உணவுப் பொருள்களை ஜெர்மானியர்கள் திருடுவதாக பல்கேரியர்கள் குற்றம் கூறுகிறார்கள். சென்ற வருஷம், அநேக பல்கேரியர்கள் தங்களுடைய மாசூல் தானியங்களை ஜெர்மானியர்களுக்கு விற்கக்கூடாதென்று நெருப்பிட்டுக் கொளுத்திவிட்டார்கள்.

### 10. நடுநிலைமை நாடுகள்.

ஸ்பெயினின் சர்வாதிகாரியான ஜெனரல் பிராங்கோ யுத்த சம்பந்தமாக ஸ்பெயினுடைய அபிப்பிராயம் என்னவென்பதை, பலாஞ்சு கட்சியின் தேசீய சபைக் கூட்டத்தில் வெளியிட்டிருக்கிறார். ஸ்பெயினுடைய அனுதாபங்களெல்லாம் அச்சு நாடுகளுடன் இருக்கின்றனவென்றும், பொதுவுடைமை சர்வாதிகாரத்தனத்துக்கு எதிராக அவைகள் பரிசுத்த யுத்தம் நடத்துகின்றனவென்றும், மிஸ்டர் ஸ்டாலின் குடியரசுக்கொள்கைக்கு நேசமானவர் என்றும், ஜெனரல் பிராங்கோ கூறினார். தன்னுடைய பிரசங்கத்தில் ரஷ்யாவைக் கடுமையாகத்தாக்கி அவர் பேசினார். ஆனால், ஸ்பெயினின் நடைமுறைக் கொள்கையில் மாறுதல் ஏற்படுமா என்பதைப்பற்றி அவர் ஒன்றும் சொல்லவில்லை.

அர்ஜெண்டைன் (தென்னமெரிக்கா) குடியரசு யுத்தத்தில் நடுநிலைமை வகித்திருந்தபோதிலும், தன்னைப் பாதுகாத்துக்கொள்ளவும், இதர அமெரிக்கக் குடியரசுகளுடன் ஒத்துழைக்கவும் வேண்டிய முயற்சிகளைக் கட்டாயம் செய்யும் என்று அர்ஜெண்டைனின் அயல்நாட்டு மந்திரி சட்டசபையின் ரகசியக் கூட்டத்தில் கூறினார்.

### 11. ரஷ்யாவும், ஜெர்மனியும்.

ரஷ்யர்கள் எத்தனை தடவை பின் தள்ளப்பட்டாலும் முடிவில் அவர்கள் ஜெர்மானியர்களைத் தோற்கடிப்பார்கள் என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை என்று மாஸ்கோவிலிருக்கும் ராய்டரின் பிரத்தியேக நிருபர் கூறுகிறார். ஜெர்மானியர்களுடைய முன்னேற்றம் குறைந்துகொண்டு வருகிறது. ஆங்கிலோ-ரஷ்ய ஒப்பந்தம் தைரியமான ஒரு நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறது. வழக்கம்போல ரஷ்ய மக்கள் தங்களுடைய வாழ்க்கையை நாள்தோறும் நடத்தி வருகிறார்கள். நாடகச்சாலைகளிலும் சினிமா சாலைகளிலும் கூட்டங்கள் அதிகமாக இருக்கின்றன. பிரசித்திபெற்ற ஆற்றங்கரையோரத்திலிருக்கும் ஓய்வு கலைத் தோட்டத்தில், பெரிய ராட்டினங்களும், சிற்றுண்டிச்சாலைகளும், நாடகங்களும் மக்களுக்கு இன்பமூட்டிக் கொண்டிருக்கின்றன.

யுத்த அரங்கத்தில் பிரமாதமான வெற்றி ஒன்றும் நாஸிகள் அடையவில்லை. நாஸிகள் முன்னேறிச் சென்றாலும், ரஷ்யப்படையைத் தோற்கடிக்க முடியவில்லை. லெனின் கிராட், மாஸ்கோ, கீவ், இவைகளை நோக்கிச்செல்ல முயற்சிக்கும் ஜெர்மானியர்கள் ரஷ்யர்களுடன் கடுமையாகப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய குரங்குச் சண்டை முயற்சிகளால் ஜெர்மானியர்களுக்கு ஏராளமான நஷ்டம் உண்டாக்கப்பட்டது. ஒரு பகுதியில், ஒரு ரஷ்ய காலாட்படை பெரிய ஜெர்மன் மோட்டார் படையைச் சுற்றி வளைத்துக்கொண்டு அதை நாசம் செய்துவிட்டது. யுத்த சாமான்கள் அதிகமாகக் கைப்பற்றப்பட்டன.

ரஷ்யாவில் ஜெர்மன் துருப்புகளின் கஷ்டமான நிலைமையை உத்தேசித்து, ஹிட்லர் இத்தாலியையும், ருமேனியாவையும் ஜெர்மனிக்கு உதவியாக அதிகத் துருப்புகள் அனுப்பும்படி கேட்டிருப்பதாக சுதந்தர பிரெஞ்சு சமாச்சார ஸ்தாபனம் கூறுகிறது. இத்தாலி 10 பட்டாளங்கள் அனுப்பவேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. ருமேனியாவுக்கு ஒடெஸ்ஸாவைக் கொடுப்பதாகவும், அதற்குப்பதிலாக துருப்புகளும், யுத்த சாமான்களும் அனுப்பவேண்டுமென்றும் ஹிட்லர் கேட்டதை ருமேனியத் தலைவர் ஜெனரல் ஆண்டெனெஸ்கோ மறுத்துவிட்டதாகத் தெரிகிறது. ஜெர்மானியர்கள் தாங்கள் போட்ட கால அட்டவணையைத் தவறிவிட்டார்கள் என்றும், ஜூலை மீ 22உ யோடு அவர்கள் தொடங்கிய யுத்தத்தின் முதல் மாதம் முடிந்துவிட்டதென்றும், இந்த யுத்தம் இன்னும் அநேக மாதங்கள் நடைபெறுமென்றும், மிஸ்டர் லாகோவிஸ்கி, ரஷ்ய அயல்நாட்டு உதவி மந்திரி, கூறுகிறார். ஸ்டாலினின் "காய்ந்ததரை" கொள்கை வெற்றிகரமாக வேலை செய்து வருகிறதென்றும், முன்னேறிவரும் எதிரிகளின் பின்பக்கத்தில் ரஷ்யப் படைகளும் ரஷ்ய மக்களும், ஜெர்மன் 'சப்ளை'களை வெட்டிவிடுகிறார்களென்றும், இது ஜெர்மானியர்களுக்கு மிகுந்த தொந்தரவைக் கொடுத்துவருகிறதென்றும் மிஸ்டர் லாகோவிஸ்கி கூறினார்.

போலோதிஸ்க், நோவோகிராட் — வாலிநிஸ்க், ஸ்மோலென்சிக் பிரதேசங்களில் கடுமையான யுத்தம் நடைபெற்றுவருகிறது. ஸ்மோலன்சிக்கைப் பிடித்துவிட்டதாக ஜெர்மானியர்கள் கூறுகிறார்கள். ஆனால் இது உண்மையல்ல என்று அமெரிக் அசோசியேடட் பிரஸ் மாஸ்கோ நிருபர் கூறுகிறார்.


சென்ற திங்கட்கிழமை (ஜூலை மீ 21உ) ரஷ்யாவின் தலைநகரமான மாஸ்கோவின்மேல் ஜெர்மன் விமானங்கள் முதல் முதலாக வெடிகுண்டுகளைப் போட்டன. 200 ஜெர்மன் விமானங்கள் ரஷ்யப்பாதுகாப்புகளைத் தாண்டி மாஸ்கோவுக்குச் செல்ல முயற்சித்தன. ஆனால் அவைகளால் முடியவில்லை; சில ஜெர்மன் விமானங்கள் மாத்திரம் மாஸ்கோவை நெருங்கி வெடிகுண்டுகளைப் போட்டன. நகரத்தில் சில இடங்களில் நெருப்பு உண்டாக்கப்பட்டது. சிலர் உயிரிழந்தார்கள்; அநேகர் காயப்படுத்தப்பட்டார்கள். ராணுவ முக்கியமான எந்த இடமும் தாக்கப்படவில்லை. இந்த விமானச் சண்டையில் 17 ஜெர்மன் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. இரண்டாவது தடவை தாக்கியபோது 15 விமானங்கள் வீழ்த்தப்பட்டன.

ஜூலை 20, 21 தேதிகளில் லெனின்கிராடைத் தாக்க ஜெர்மன் விமானங்கள் முயற்சிசெய்தன. அம்முயற்சி பயன்பெறவில்லை. முதல் முயற்சிசெய்தபோது 11 ஜெர்மன் விமானங்களும், இரண்டாவது முயற்சியில் 8 விமானங்களும் சுட்டு வீழ்த்தப்பட்டன. இதில் நான்கு ரஷிய விமானங்கள் இழக்கப்பட்டன.

யூக்ரெயின் பிரதேசத்தில் நோவோகிராட்-வோலினெஸ்க்கிலிருந்து ஜிடோமிர் என்ற இடத்துக்கு ரஷ்யர்கள் பின்வாங்கிச் சென்றிருக்கிறார்கள். இந்த இடம் கீவுக்கு மேற்கே 85 மைல் தூரத்தில் இருக்கிறது.

லெனின்கிராடை நோக்கி கொறடா முனைகள் போல் முன்னேற முயற்சிக்கும் ஜெர்மானியர்கள் பீபஸ் ஏரிக்குத் தென்கிழக்கில் தடுக்கப்பட்டிருக்கி

ஓடும் இரும்புக்கோட்டைகளாகிய பிரிட்டிஷ் டாங்குகளுக்குள், டாங்க்படைகள் புகுந்து, அவைகளை ஒட்டுவதற்காகத் தயாராகக் காத்துக்கொண்டிருக்கும் காட்சி.



ருர்கள். ஆனல் பின்லாந்திலிருந்து முன்னேறி, லடோகா, ஒனெகா என்ற இரண்டு ஏரிகளுக்கு மத்தியில் உள்ள 80 மைல் அகலமான பிரதேசத்தில் பிரவேசித்திருக்கிருர்கள். லெனின்கிராட்-முர்மான்சிக் ரயில்வேயிலுள்ள பெட்ரோசாவொடெஸ்க் என்ற பட்டணத்தைச்சுற்றி, அதாவது லெனின்கிராடுக்கு 210 மைல் வடகிழக்கில், சண்டை நடந்துகொண்டிருக்கிறது. ஜெர்மன் துருப்புகளுக்குப் பின்னல் ஆகாய விமானங்களிலிருந்து ரஷயத்துருப்புகள் 'பாரஷுட்' என்ற விமான விரிப்புக்குடையின் உதவிகொண்டு இறக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

ரஷ்யக் குடியரசின் தலைவரான மிஸ்டர் காளினின் மிஸ்டர் ஸ்டாலினை பாதுகாப்பு மந்திரியாக நியமித்திருக்கிருர். ஸ்டாலின் முதல் மந்திரி ஸ்தானத்தையும் வகித்துவருகிருர். இதற்குமுன் பாதுகாப்பு மந்திரியாயிருந்த மார்ஷல் தீமோ ஷெங்கோ உதவி பாதுகாப்பு மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிருர்.

பால்டிக் கடலில் எதிரிகளுடைய துருப்புகளைத் தாங்கிச்செல்லும் 11 கப்பல்கள் முழுகடிக்கப்பட்டன. ஒரு 'டாங்கர்' கப்பலும் நாசமாக்கப்பட்டது. ஒரு எதிரி ஆகாய விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டது. ரஷ்யாவுக்கு ஒரு விமானமும், ஒரு டார்பிடோ படகும்தான் இந்தப்போரில் நஷ்டம்.

கடைசியாக வெளிவந்த செய்திகளின் சுருக்கமாவது :—யூக்ரெயின் பிரதேசத்தில் முன்னேறிக்கொண்டுவருவதாக ஜெர்மானியர்கள் கூறுகிருர்கள். லடோகா ஏரிக்கு வடகிழக்கிலும், சல்லாவிலிருந்து கண்டா லக்ஷாவை நோக்கியும் ஜெர்மானியர்கள் முன்னேறிச் செல்வதாகக் கூறப்படுகிறது. ஒரு மாதத்திற்குள் ஜெர்மன் கொடி மாஸ்கோவின் மேல் பறக்கும் என்று டோக்கியோவிலுள்ள ஜெர்மன் ராணுவ ஸ்தானீகர், கர்னல் நிமிட்ஸ், கூறுகிருர்.

ரஷ்யாவில் ஜெர்மனி ஒரு மாத காலமாகச் செய்த யுத்தம், ரஷ்யாவின் தோலில் ஊசிகுத்துவதுபோல இருக்கிறது என்று நியூயார்க் "டைம்ஸ்" பத்திரிகை கூறுகிறது. உலகத்தை ஜெயிப்பது என்ற பேராசை கொண்ட வீணர்களுடைய எலும்புகள் ரஷ்ய நிலத்தில் புதைக்கப்பட்டிருக்கின்றன என்றும், தாமர்லேன், செங்கிஸ்கான், நெப்போலியன் முதலியவர்களுக்கு என்ன முடிவு நேர்ந்ததோ அந்த முடிவு ஹிட்லருக்குக் கிடைக்கும் என்றும் அப்பத்திரிகை எழுதுகிறது.

# பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட்டின் எச்சரிக்கை.

## ஜெர்மனியின் சூழ்ச்சி : ஜப்பானின் முயற்சி.

### தெற்கு நோக்கிச் செல்லும் முயற்சியைப்பற்றி லார்டு ஹாலிபாக்ஸ் பேச்சு.

அட்லாண்டிக் கடலிலும், பசிபிக் கடலிலும் தனக்குப் பெரிய ஆபத்திருக்கிறதென்று உணர்ந்து, அமெரிக்கா வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகளையெல்லாம் செய்துகொண்டு வருகிறது. அப்படிச் செய்யப்பட்ட ஏற்பாடுகளில் மூன்று முக்கியமானவை :—

(1) பழைய அமெரிக்கக் கொள்கையான கடல் சுதந்தரத்தை, பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் வற்புறுத்திக் கூறியிருக்கிருர்.

(2) அட்லாண்டிக் கடலில் வெகுதூரம் வரைக்கும் சென்று மேற்குக் கோளத்தைப் பாதுகாக்கும்படி அமெரிக்கக் கப்பற்படைக்கு அவர் கட்டளையிட்டிருக்கிருர். இந்தச் செய்கையால் அமெரிக்கா ஒரு கண்டத்தின் நிலமையிலிருந்து ஒரு கடல் வல்லரசாய் மாறிவிட்டது என்று லண்டன் "டைம்ஸ்" பத்திரிகை எழுதிற்று.

(3) ஐஸ்லாந்தில் அமெரிக்கத் துருப்புகள் பிரவேசித்து ஜெர்மனியின் வடக்கு முயற்சியைத் தடுத்தது மற்ருெரு முக்கியமான ஏற்பாடாகும். நார்வேயின் வடக்குத் துறைமுகங்களில் ஜெர்மன் துருப்புகள் ஒன்று சேர்த்துவைக்கப்பட்டிருக்கின்றனவென்றும், படையெடுப்புப் பயிற்சி வேலைகளெல்லாம் அவைகள் செய்துவருகின்றனவென்றும் அமெரிக்காவுக்கு முன்னமேயே செய்தி எட்டியிருந்தது. ஐஸ்லாந்து மக்களின் தேகத்திலும், ஜெர்மானியர்கள் தேகத்திலும் ஒரே நார்டிக் ரத்தம் ஓடுகிறதென்றும், இரண்டு நாட்டினரும் ஒரே வர்க்கத்தைச் சேர்ந்தவர்களென்றும், ஐஸ்லாந்தின் பாஷையில் ஜெர்மனி ரேடியோ பிரசாரம் செய்துகொண்டு வந்தது. பர்ஜன் என்ற இடத்தில் ரகசிய ராணுவப் பயிற்சிகள் சிலகாலமாக நடந்தன. இவையெல்லாம் அமெரிக்காவுக்குச் சந்தேகத்தை உண்டாக்

கின. ஐஸ்லாந்து, கிரீன்லாந்து, நியூ பவுண்ட்லாந்து, இவைகள் மூலமாக ஜெர்மனி அமெரிக்காவைத் தாக்க முயற்சிக்கிறது என்ற விஷயம் விளக்கமாகத் தெரிந்தது. உடனே ஐஸ்லாந்துக்கு அமெரிக்கத் துருப்புகள் அனுப்பப்பட்டன. ஸ்காத்லாந்தின் துறைமுகங்களிலிருந்து ஐஸ்லாந்து 600 மைல் தூரத்திலிருக்கிறது. அட்லாண்டிக் கடலில் 3,000 மைல் தூரம்வரைக்கும் அமெரிக்காவிலிருந்து செல்லும் கப்பல்களைப் பாதுகாக்கும் பொறுப்பு இதனால் அமெரிக்காவுக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பிரதேசம் யுத்தஸ்தானமாக ஜெர்மனியால் கருதப்படுகிறது.

இந்த ஏற்பாடுகளுக்கு முன்பு வாடகை—கடன் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி, 70 லட்சம் டாலர் பொறுமான யுத்த சாமான்கள் பிரிட்டனுக்கும், ஜெர்மனியோடு போர்புரியும் இதர நாடுகளுக்கும் அமெரிக்கா அனுப்பும் கடமையை மேற்கொண்டிருக்கிறது. தன்னுடைய கப்பற்படையில் 50 நாசகாரிகளை, பிரிட்டனுக்கு வாடகைக்குக் கொடுத்திருக்கிறது; அநேக நூற்றுக்கணக்கான டன் கப்பல்கள் மாதா மாதம் அனுப்பப்படுகின்றன; புதிய ஆகாய விமானங்களும் வெடிகுண்டு சாமான்களும் அமெரிக்கா அனுப்பிக்கொண்டே வருகிறது. இப்போது ஜெர்மானியர்கள் தெற்கே டாக்கர் மூலமாகவும் பிரேசில் மூலமாகவும் அமெரிக்காவைத்தாக்க முயற்சி செய்யலாம் என்று கருதப்படுகிறது. இந்த விஷயம் பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் யோசனை செய்யப்பட்டு வருகிறது. தென்னுப்பிரிக்காவில் காம்பியாவுக்குத் தெற்கில் உள்ள கடற்படைத்தளத்தை அமெரிக்காவின் உபயோகத்திற்குக் கொடுக்கலாம் என்ற அபிப்பிராயம் சொல்லப்படுகிறது.

### ஜெர்மனியின் தூண்டுகோள்.

பசிபிக்கடலில் ஜப்பான் தொந்தரவு கொடுப்பதாயிருந்தால், அமெரிக்கா அட்லாண்டிக்கடலில் செய்யும் முயற்சி நிறுத்தப்படும் என்ற ஹிட்லருடைய எண்ணம் நிறைவேறுவதற்கு இடம் இல்லை. ஜப்பானுடைய நோக்கங்கள் நன்ருகத் தெரிந்திருந்த போதிலும், அமெரிக்கா ரஷ்யாவுக்குப் பூரண உதவி அளிப்பதாக வாக்குறுதியளித்திருக்கிறது. அமெரிக்கக் கப்பல்கள் ரஷ்யத் துறைமுகமாகிய விலாடிவாஸ்டாக்குக்கு யுத்த சாமான்கள் கொண்டு செல்கின்றன. ஜப்பானுக்கு ரப்பரும் தகரமும் ஏராளமாக வேண்டியிருக்கிறது. விலாடிவாஸ்டாக்கை இந்த சாமான்களுக்குச் ‘சப்ளை’ தளமாக அமெரிக்கா உபயோகப்படுத்துவதை ஜப்பான் விரும்பாது. ஜப்பான் தெற்கு நோக்கிச்சென்று இண்டோ—சீனு, டச்சு கிழக்கு இந்திய தீவுகள், சிங்கப்பூர் முதலியவைகளை அதிக்கிரமிக்க முயற்சிசெய்தால், அமெரிக்கா சண்டை போடும்படி தூண்டப்படும்; அப்போது பிரிட்டனும் அமெரிக்காவும் ஜெர்மனிக்கு விரோதமாகச் செய்யும் யுத்த முயற்சியின் வேகம் வேறுவிதமாகத் திரும்புவதற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்படும்—இந்த நோக்கத்துடன் தான் ஜெர்மனி ஜப்பானைக் கட்டாயப்படுத்தி, தெற்கு நோக்கிச்செல்லும்படி தூண்டுகிறது. ஆனல் பிரிட்டனும் அமெரிக்காவும் எது நேர்ந்தாலும் அதற்கு வேண்டிய முயற்சிகளோடு தயாராயிருக்கின்றன.

இப்போதுள்ள நிலைமையை அமெரிக்காவிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானிகர், லார்டு ஹாலிபாக்ஸ், விளக்கமாகக் கூறியிருக்கிருர். அவர் கூறியதன் சாரமாவது:—பசிபிக் பிரதேசத்தில் சமாதானம் நிலவ வேண்டுமென்பது தான் பிரிட்டிஷ், அமெரிக்க அரசாங்கங்களின் நோக்கம்; ஜப்பானுடன் சண்டை போடவேண்டுமென்ற எண்ணம் இரண்டு அரசாங்கங்களுக்கும் கிடையாது. தூரக் கிழக்கரங்கத்தில் ஜப்பானைப் பாதிக்கும் எந்த விஷயமும் சமாதான முறையில் முடிவு செய்யலாம். ஆனல் பிரிட்டனுக்குள்ள உரிமைகளை எந்த நாடாவது அநியாயமாகப் பாதிக்க முயற்சி செய்தால், பிரிட்டன் சும்மா இருக்க முடியாது. ஐரோப்பாவில் ஒரு யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் காரணத்தால், தூரக்கிழக்கரங்கத்தில் பிரிட்டன் தன்னுடைய உரிமைகளைக் கைவிடாது.

லார்டு ஹாலிபாக்ஸ் ஜப்பானைப்பற்றி எச்சரிக்கை செய்ததுபோல, பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் ஜெர்மனியைப்பற்றி எச்சரிக்கைசெய்து, அமெரிக்க சட்டசபைக்கு ஒரு செய்தி அனுப்பியிருக்கிருர். அச்செய்தியிலுள்ள சில முக்கியமான விஷயங்கள் பின்வருமாறு:—

(1) ஒரு வருஷத்துக்கு முன்பு இருந்ததைவிட அகில தேசீய நிலைமை அதிக நெருக்கடியாய்விட்டது. ஆகையால் அமெரிக்கப் பட்டாளங்கள் இப்போதுள்ள எண்ணிக்கை குறைக்கப்படாமல் பலப்படுத்தப்பட்டு முழுதும் தயாரான நிலைமையில் இருக்கவேண்டியது அவசியம்.

2. அமெரிக்க பட்டாளத்தின் எண்ணிக்கை வரப்போகும் வருஷத்தில்கூட இப்போதுள்ளபடி இருக்க வேண்டும். எவ்வளவு அமெரிக்கர்களுக்கு ராணுவப் பயிற்சி சொல்லிக்கொடுக்கிருேமோ அவ்வளவும் நமக்கு நன்மை.

3. இப்போது தயார் செய்யப்பட்டிருக்கும் பட்டாளத்தைக் கரைத்துவிடுவது பெருந்தீங்கை விளைவிக்கும். பயிற்சித் திட்டத்தையும், ராணுவ விஸ்தரிப்புத் திட்டத்தையும் ஆறு மாத காலம் பின்னல் தள்ளிவைக்கும்.

#### கால அட்டவணை கணக்கு.

4. இன்றையதினம் இருக்கும் நிலைமை மிக அபாயமாயிருக்கிற தென்பதை நான் உணர்கிறேன்.

5. ஐரோப்பாவிலும், ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும் ஜெர்மானியர்களுடைய முயற்சி கால அட்டவணையின் கணக்குப்படி நடத்தப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு முயற்சியிலும், ஏராளமான யுத்த முஸ்தீப்பு தளவாடங்களும், பயிற்சி பெற்ற துருப்புகளும் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன. தகுந்த காலத்திற்காகக் காத்திருந்து, அக்காலம் வந்த பிறகு உடன்படிக்கைகளையும் ஒப்பந்தங்களையும் கிழித்தெரிந்து, ஒரே சமயத்தில் ஏராளமான துருப்புகளுடன் அதி தீவிரமாகத் தாக்குவதுதான் ஜெர்மன் யுத்தமுறை.

தேர்ந்தெடுக்கப்பட்ட சிப்பாய்கள், தேசிய பாதுகாப்புத் துருப்புகள், ‘ரிசர்வ்’ படைகள், இவைகளுடைய ராணுவச்சேவை காலத்தை இன்னும் ஒரு வருஷத்துக்கு அதிகப்படுத்தவேண்டுமென்று அவர் சட்டசபையைக் கேட்டிருக்கிருர்.

அமெரிக்கா இனிச் செய்யவேண்டிய காரியங்களைப் பற்றி, பத்திரிகைகள் பல அபிப்பிராயங்களைத் தெரிவித்திருக்கின்றன அவைகளை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்:—

(1) சப்மரீன்களையும், தாக்கும் விமானங்களையும் கொள்ளைக் கப்பல்களாகக் கருதி, அமெரிக்கக் கப்பற்படை அவைகளை அழிக்கவேண்டும்;

(2) அமெரிக்க விமான ஓட்டிகள் நேராக பிரிட்டனுக்கே ஆகாய விமானங்களைக்கொண்டு சேர்க்க வேண்டும்.

(3) அசோர்ஸ், கேப்வர்ட் தீவுகள், டாக்கர் பிரதேசங்களில் ஜெர்மானியர்கள் கொஞ்சங் கொஞ்சமாக நுழைவதைத் தடுப்பதற்கு கவனமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

# ரஷ்யாவில் நடக்கும் மாபெரும் யுத்தம்.

## நான்குவாரச் சண்டையின் பலாபலன்கள்.

### 1812-ல் நெப்போலியன் முயற்சிக்கு நேர்ந்தகதி.

### ஆங்கிலோ—ரஷ்ய ஒப்பந்தத்தின் முக்கியம்.

ஜூன்மீ 22உ ஞாயிற்றுக்கிழமை, ஜெர்மனி ரஷ்யாவைக் காரணமில்லாமல் தாக்கியது. ஒரு மாதமாக ரஷ்யாவில் மாபெரும் யுத்தம் நடைபெற்று வருகிறது. சென்ற செவ்வாய்க்கிழமை ஜூலைமீ 22உ ரஷ்ய யுத்தத்தின் இரண்டாவது மாதம் தொடங்கியிருக்கிறது. முதல் மாதத்தில் ஜெர்மானியர்கள் துரிதமாகமுன்னேறிச் சென்ருர்கள். இந்த மகாயுத்தம் 1939-ஆம் தொடங்கியபிறகு ரஷ்யாவால் சேர்க்கப்பட்ட பிரதேசங்களெல்லாம் ஜெர்மனி கைப்பற்றிக்கொண்டது. ஜெர்மனிக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் எஸ்தோனியா, லாட்வியா, லிதுவேனியா, கிழக்கு போலந்தில் ஒரு பாகம்,

பெஸ்ஸரேபியா முதலிய பிரதேசங்களை முதலில் கைப்பற்றியது மிஸ்டர் ஸ்டாலினின் தூரதிருஷ்டியைக் காண்பிக்கிறது. இதனால் லெனின்கிராடையும், மாஸ்கோவையும் லட்சியங்களாக வைத்திருந்த ஜெர்மனி முதலில் இந்த நாடுகளைக் கைப்பற்றிவிட்டு, பிறகு ரஷ்யாவில் பிரவேசிக்க ஆரம்பித்தது. ரஷ்யர்கள் ஜெர்மானியர்களுக்குப் பலத்த நஷ்டத்தை உண்டாக்கியிருக்கிறார்கள். 26 நாள் இடைவிடாது சண்டைசெய்த பிறகு தான் ரஷ்யப் பிரதேசத்துக்குள் செல்ல ஜெர்மானியர்களால் முடிந்தது.

வடக்குப் பகுதியில், பிஸ்கோவ், நவ்கோராட் பட்டணங்களை நோக்கி ஜெர்மானியர்கள் செல்கிறார்கள். இந்தப் பட்டணங்கள் லெனின்கிராடுக்கு 125 மைல் தெற்கில் இருக்கின்றன. லெனின்கிராடுக்குப் போகும் வழியைப் பலம் பொருந்திய ரஷ்யப் பட்டாளங்கள் பாதுகாத்துக்கொண்டிருக்கின்றன.

மத்தியப் பகுதியில், வெள்ளை ரஷ்யாவைத் தாண்டுவதற்கு ஒரு முழுமாதமுமாய்விட்டது. 130 மைல் கடந்து ஸ்மோலென்சிக் என்ற தொழிற்சாலைப் பட்டணத்தை ஜெர்மானியர்கள் நெருங்கியிருக்கிறார்கள். இந்தப் பட்டணம் மாஸ்கோவிற்கு மேற்கே 200 மைல் தூரத்திலிருக்கிறது.

தெற்குப்பகுதியில், யூக்ரெயின் மாகாணத்தின் தலைநகராகிய கீவைப் பிடிக்க முயற்சிக்கும் ஜெர்மானியர்கள் இன்னும் பெஸ்ஸரேபியாவில்தான் இருக்கிறார்கள். முதலில் லௌ என்ற இடத்தைப் பிடித்தார்கள். அங்கு கடுமையான எதிர்ப்பு இருப்பதைக்கண்டு, வேறொருபோக்கை எடுத்துக்கொண்டு லூக்கிலிருந்து கீவுக்குச்செல்ல முயற்சித்தார்கள். தெற்கில் ஜெர்மானியர்களுடைய தாக்குதலை எதிர்பார்த்து ரஷ்யர்கள் தகுதியான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள். பெஸ்ஸரேபியாவின் தலைநகரான கிஷிநெவ்வை ரஷ்யர்களிடமிருந்து பிடித்துவிட்டதாக ருமேனியர்கள் கூறுகிறார்கள். நோவோகிராட்—வோலிநெஸ்க்கைப் பிடித்துவிட்டதாக ஜெர்மானியர்கள் கூறுகிறார்கள். ஜூலை 4-ந் தேதி ரஷ்யாவின் உண்மை எல்லையைத்தாண்டி ஜெர்மானியர்கள் சென்றிருக்கிறார்கள்.

ரஷ்ய முதல்மந்திரி, மிஸ்டர் ஸ்டாலின், கூறியபடி, ரஷ்யர்கள் எதிரிகளின்கையில் அகப்படப்போகும் பிரதேசங்களில் உள்ள எல்லா பொருள்களையும் சுட்டு நாசமாக்கிவிட்டு, பிறகுதான் வெளியேறிச் செல்கிறார்கள். கிஷினெவ் பட்டணத்திலிருந்து ரஷ்யர்கள் போகும்போது எல்லாவற்றிற்கும் நெருப்பு வைத்துவிட்டுப் போனார்கள். ஜெர்மனியால் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில், ரஷ்யர்கள் ஜெர்மானியர்களுக்கு எவ்வளவு தொந்தரவு கொடுக்க முடியுமோ அவ்வளவு தொந்தரவு கொடுக்கிறார்கள். ரஷ்ய சில்லரைத் துருப்புகள் குரங்குச்சண்டை செய்து ஜெர்மன் துருப்புகளுக்கும் வெடிகுண்டு சாமான்களுக்கும் நஷ்டத்தை உண்டாக்கிவருகின்றன.

## லட்சியத்தை அடையவில்லை.

இப்படி, ஒரு மாத கடுமையான யுத்தத்தின் பிறகு, ஜெர்மானியர்கள் தங்களுடைய லட்சியங்களாகிய லெனின்கிராட், மாஸ்கோ, கீவ், இம்மூன்றில் ஒன்றைக்கூட அடையமுடியவில்லை. "ஸ்டாலின் லைன்" என்ற பிரதம ரஷ்யப் பாதுகாப்பு அரணை சில இடங்களில் துளைத்துச் சென்றதாக ஜெர்மானியர்கள் கூறுகிறார்கள். ஆனால் அதை சரியாகத் தாக்குவது என்ற முயற்சி இன்னும் ஆரம்பிப்பதற்கு முடியாமல் இருக்கிறது.

இதனால் ரஷ்யாவுக்கு யாதொரு பயமுமில்லை என்று சொல்வதற்கு முடியாது. மூன்று முக்கியமான பிரதேசங்களில், அதாவது, பிஸ்கோவ்—பார்கோவ் பகுதி, ஸ்மோலென்சிக் பகுதி, கீவ் பிரதேசம், இவைகள் மூன்றிலும் ஜெர்மன் டாங்கிப் படைகள் முன்னேறிச் சென்றிருக்கின்றன. ஆனால் சென்ற வருஷம் பிரெஞ்சுக்காரர்கள் செய்த பெருந் தவறை ரஷ்யர்கள் செய்யவில்லை. ஜெர்மன் பட்டாளத்தின் அடிப்படையான மோட்டார் துருப்புகள் வருவதை ரஷ்யர்கள் தடுத்துக்கொண்டிருக்கிறார்கள். முன்னேறிச் சென்ற ஈட்டி முனைப் பட்டாளங்களைத் திருப்பித் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஹிட்லர் ஏராளமான துருப்புகளையும் யுத்த தளவாடங்களையும் முரட்டுத்தனமாக உபயோகித்தபடியினால், ஸ்மோலென்சிக் பிரதேசத்தில் அதிக தூரம் ஜெர்மானியர்கள் பிரவேசிக்க முடிந்தது. எல்லாம் ரஷ்யத் துருப்புகளைப் பொறுத்திருக்கிறது.

## பழைய சரித்திரமும், புதிய சரித்திரமும்.

1812-ம் வருஷத்தில் நெப்போலியனுடைய துருப்புகள் ரஷ்யாவைத் தாக்கியதையும், 1941-ம் வருஷத்தில் ஹிட்லருடைய துருப்புகள் ரஷ்யாவின் மேல் படையெடுத்ததையும் ஒப்பிட்டுப் பார்த்தால் சில ருசிகரமான விஷயங்கள் தெரிய வருகின்றன. நெப்போலியன் ரஷ்ய எல்லையைத் தாண்டியது ஜூன்மீ 24உ. ஹிட்லருடைய துருப்புகள் ரஷ்யாவில் பிரவேசித்தது ஜூன்மீ 22உ. ஸ்மோலென்சிக்கில் நெப்போலியன் சேர்ந்தது ஆகஸ்டுமீ 16உ. அப்போதும் ரஷ்யர்களைத் தோற்கடிக்க முடியவில்லை. ஆனால் இப்போது நவீன முறைகளைக் கொண்ட ஜெர்மன் துருப்புகள் நெப்போலியன் கால அட்டவணைக்கு முன்பு முன்னேறியிருந்தாலும், ரஷ்யர்களை முழுதும் தோற்கடிக்கும்படி செய்ய அவர்களால் முடியவில்லை.

ரஷ்ய கடற்படை எதிரிகளின் கப்பல்களில் ஒரு டஜனை பால்டிக் கடலில் நாசம் செய்துவிட்டது. ரஷ்ய ஆகாய விமானப்படை ப்ளுயெஸ்டி, கான்ஸ்டான்சா, இந்த இரண்டு இடங்களிலுள்ள ருமேனிய பெட்ரோல் யந்திரசாலைகளைப் பலமாகத் தாக்கி பலத்த சேதத்தை உண்டாக்கியிருக்கின்றது. பின்லாந்து பட்டணங்களும் ரஷ்ய விமானங்களால் தாக்கப்பட்டிருக்கின்றன.

## ரஷ்யத் திறமையின் ரகசியம்.

லண்டன் "டைம்ஸ்" பத்திரிகை ரஷ்ய யுத்தத்தின் போக்கைப்பற்றி ஒரு தலையங்கம் எழுதியிருக்கிறது. அதனுடைய சாரம் பின்வருமாறு:—நான்கு வார யுத்தத்தின் பிறகு ரஷ்யப் பட்டாளங்கள் ஒழுங்கான முறையில் தைரியத்துடனும் நம்பிக்கையுடனும் எதிர்த்துப் போர் புரிந்து வருகின்றன. ராணுவ அரங்கத்திலாவது, அரசியல் அரங்கத்திலாவது யாதொரு பிளவும் ஏற்படவில்லை. கைப்பற்றப்பட்ட ஒவ்வொரு மைலுக்கும் ஹிட்லருக்குச் சரியான நஷ்டம் உண்டாக்கப்படுகிறது. ரஷ்யா தடுத்து நிற்கும் திறமையின் ரகசியம் அதனுடைய பெருந் தொழிற்சாலைகள் கிழக்கே வெகு தூரத்தில் இருப்பதுதான். ஏதோ இரண்டு மூன்று இடங்களைப் பலமாகத் தாக்கினால் ரஷ்யா விழுந்துவிடும் என்ற ஹிட்லரின் நினைப்பு பயன்படவில்லை. நெப்போலியன் முன்னேறிச் சென்றபோது, ரஷ்யர்கள் எல்லாவற்றையும் நாசம் செய்துவிட்டு பின்னிடைந்து போனது போல இப்போதும் செய்கிறார்கள். ரஷ்யாவின் பாதுகாப்பு பலம் சிதறடிக்கப்படாமல் இருக்கிறது. ஆகையால் என்ன நடந்தாலும், ரஷ்யா திரும்பிப் போர் புரிவதற்குச் சக்தி இருக்கிறது. ஹிட்லரின் நோக்கம் ரஷ்யாவைத் தோற்கடித்துவிட்டு, பிறகு பிரிட்டன்மேல் பாய வேண்டுமென்பது. ஆனால் முதல் நோக்கத்தை அழிப்பதற்கு, பிரிட்டன் ரஷ்யாவுக்குத் தன்னாலான எல்லா உதவியும் செய்துகொண்டு வருகிறது. ஆங்கிலோ-ரஷ்ய ஒப்பந்தத்தினால் ஏற்பட்ட சௌகரியங்களைத் திறமையாக உபயோகப்படுத்தினால், ரஷ்யச் சண்டை இந்த யுத்தத்தின் திருப்புப் பாதையாகலாம்.

பிரிட்டனில் மிஸ்டர் சர்ச்சில் செய்தபடி, ரஷ்யாவில் மிஸ்டர் ஸ்டாலின் முதன் மந்திரி பதவியுடன் பாதுகாப்பு மந்திரி பதவியையும் ஏற்றிருக்கிறார். இதனால் ரஷ்யாவில் தொடர்பான யுத்த ஒற்றுமை முயற்சி வெற்றிகரமாக நடப்பதற்குச் சௌகரியங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவர் தலைமையின் கீழ் வேலை செய்யும் மூன்று தளகர்த்தர்கள்—மார்ஷல் வாரஷிலோவ், டீமோஷெங்கோ, பூடென்னி—அனுபவம் பெற்ற சிறந்த தளகர்த்தர்கள். அவர்களுடைய திறமை வெற்றிக்கனுகூலமாக உபயோகப்படும் என்பதில் சந்தேகமில்லை.

# நாஸிகளின் கொடுங்கோலின் கீழ் முஸ்லீம்கள்.

## தொழுகைக் கோயில்கள் இடிக்கப்பட்டன.

### வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டன: முஸ்லிம் தலைவர் தூக்கிலிடப்பட்டார்.

ஐரோப்பாவில் உள்ள முஸ்லீம்கள் ஜெர்மானியர்களுடைய ஆட்சியின்கீழ் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பதைப்பற்றிய விவரங்களை மிஸ்டர் மகமது எல் ஹஷீமி என்ற இந்திய முஸ்லீம் "ஸ்டார் ஆப்

இந்தியா" பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறார். அவருடைய கட்டுரை கெய்ரோவிலுள்ள "வபூத் எல் மஸ்ரி" என்ற எகிப்தியப் பத்திரிகையில் மறுபடியும் வெளியிடப்பட்டிருக்கிறது. அக்கட்டுரையில் கூறும் முக்கியமான விவரங்கள் பின்வருமாறு :—

"பால்கன் நாடுகளைக் கைப்பற்றியதனால், ஹிட்லருடைய துருப்புகள், நெருங்கிய கிழக்கரங்கத்திலும், மத்திய கிழக்கரங்கத்திலும் உள்ள முஸ்லீம் நாடுகளின் வாயிற்படிக்கருகில் வந்து விட்டன. ஹிட்லரைத் தன்னுடைய மனம்போன போக்கின்படி விட்டு விட்டால், இஸ்லாத்தினுடைய கலையும், நாகரீகமும், மதசம்பந்தமான பரிசுத்த க்ஷேத்திரங்களும், ஞாபகச் சின்னங்களும் அடியோடு அழிக்கப்பட்டுப் போய்விடும். அல்பேனியாவில் இதாலியர்கள் முஸ்லீம்களை மிகக் கொடுமையாக நடத்தினார்கள். அல்பேனியாவில் உள்ள முஸ்லீம்கள் கடுமையான பசியினால் வாடி வருந்துகிறார்கள் நாட்டில் பஞ்சம் தாண்டவமாடுகிறது. மகமதியர்களுடைய தொழுகை இடங்களாகிய மாஸ்குகளும், இதர பரிசுத்த ஸ்தாபனங்களும், ஜெர்மானியர்களால் கொள்ளையடிக்கப்பட்டு, இடித்துத் தள்ளப்பட்டன. சந்தோஷகரமான கிராமங்கள் கைதிகள் வைக்கப்படும் கடூரக் கொட்டடிகளாக மாறியிருக்கின்றன.

"யூகோஸ்லாவியாவை ஹிட்லருடைய துருப்புகள் கைப்பற்றியபோது, முஸ்லீம் பட்டணங்களும் அழிக்கப்பட்டன. செரஜீவோ என்ற ஊரிலுள்ள மிக அழகான மகமதிய தொழுகை சாலை தரைமட்டமாக இடித்து நாசமாக்கப்பட்டது. இந்த முஸ்லீம் பட்டணத்தில் இப்போது எல்லாம் அழிக்கப்பட்டு, நிசப்தமாக இருக்கிறது. யூகோஸ்லாவியா முழுவதிலுமே, மக்கள் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, வசிக்க வீடில்லாமல், அலைந்து திரிகிறார்கள். ஜெர்மானியர்கள் அவர்களுடைய வீடுகளைக் கொள்ளையடித்து அங்கு உள்ள பொருள்களைக் கவர்ந்து செல்கிறார்கள்.

"ஐரோப்பாவில் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமில்லை. ஆனால் அவர்கள்கூட ஹிட்லரின் கெஸ்டோபோவுடைய ரப்பர் தடியடிகளிலிருந்து தப்பமுடியவில்லை. போலந்திலுள்ள முஸ்லீம்கள் எவ்வளவு கொடுமையாக நடத்தப்படுகிறார்களென்பதைப் பற்றிய விவரங்கள், பாலஸ்தீனத்திலிருக்கும் முஸ்லீம்களுக்கு எட்டியிருக்கின்றன. போலந்தில் உள்ள முஸ்லீம் தொழுகைக் கோயில்கள் பல அழிக்கப்பட்டன. அழிக்கப்படாதவைகள் கால் நடைகள் கட்டும் இடமாகவும், விவசாயச் சாமான்கள் சேமித்து வைக்கும் பண்டக சாலைகளாகவும் உபயோகப்படுத்தப்பட்டன. போலந்திலுள்ள முஸ்லீம்கள் தங்களுடைய வீட்டைவிட்டுத் துரத்தப்பட்டார்கள். அவர்கள் வெளியில் பட்டினியாகத் திரிகிறார்கள். முஸ்லீம் ஆண்கள் ஜெர்மனிக்குக் கொண்டுபோய் அடிமைகளாக நடத்தப்பட்டு, கட்டாயப்படுத்தி வேலைவாங்கப்படுகிறார்கள். சமீபத்தில் ஒரு போலிஷ் முஸ்லீம் தலைவரை, பகிரங்கமாக தூக்கிலிட்டுக் கொன்றார்கள்."

## ஹிட்லருடைய நாஸ்திகக் கொள்கை.

### மதத்தலைவர்கள் சித்திரவதை செய்யப்படுகிறார்கள்.

ரஷ்யாவுடன் செய்துகொண்ட சமாதான ஒப்பந்தத்தை உடைத்து ரஷ்யாவை அதிக்கிரமமாகத் தாக்கியதற்கு ஹிட்லர் கூறும் காரணம் விநோதமானது. உலகத்தை நாஸ்திகத்திலிருந்து காப்பதற்காகவே, ஜெர்மனி ரஷ்யாவுடன் போர் தொடுத்ததாம்! இது எவ்வளவு பொய்யான விஷயம் என்பதை "ஆல்தஸ்தூர்" என்ற கெய்ரோ பத்திரிகை விளக்கிக் காட்டியிருக்கிறது. அப்பத்திரிகை கூறுவதாவது :—

"ஹிட்லர் மதங்களுக்குக் கொடுக்கும் தொந்தரவுகளை எல்லா மதங்களின் தலைவர்களும், உலகத்தின் பல பாகங்களில் கடுமையாகக் கண்டித்திருக்கிறார்கள். மத சுதந்தரத்தைப் பற்றி, பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் சமீபத்தில் தான் செய்த ஒரு பிரசங்கத்தில் கூறியிருக்கிறார். ஹிட்லரிசம் தோற்கடிக்கப்பட்ட பிறகு உண்டாகும் புதிய உலகத்தில், மத சுதந்தரம் அஸ்திவாரமான அடிப்படைக் கொள்கையாக இருக்கும் என்று அவர் குறிப்பிட்டார். ஜெர்மனியர்களுடைய கைதிக் கொட்டடியில், கடவுள் வழியைப் பின்பற்றும், மதத் தலைவர்கள் விலங்கிடப்பட்டுக்கிடக்கும் துக்கக் காட்சியை வர்ணித்துக் கூறினார். ஆயிரக்கணக்காக கடவுளின் அடியார்கள் சித்திரவதை செய்யப்பட்டு, கைதிக் கொட்டடிகளுக்கு அனுப்பப்பட்டார்கள். அதன் காரணமென்ன? ஹிட்லருடைய நாஸ்திகக் கொள்கையை அவர்கள் ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டார்கள். அதனால்தான், அவர்கள் எல்லா வித கஷ்டங்களுக்கும் உட்படுத்தப்படுகிறார்கள்."

## அடிமைநாடுகளின் விடுதலை மந்திரம்.

ஆங்கிலத்தில் "விக்டரி" என்றால் வெற்றி என்று பொருள். அந்த வார்த்தையின் முதலெழுத்தாகிய "V" (வி), ஜெர்மனி அதிக்கிரமித்த நாடுகளின் விடுதலை மந்திரமாய் விட்டது. இந்த வெற்றிமனப்பான்மை இயக்க சம்பந்தமாக ரேடியோ பிரசாரம் செய்தவர் கர்னல் பிரிட்டன் என்பவர். இந்த "V" இயக்கத்தை ஆரம்பித்தவர் பிரிட்டிஷ் முதல் மந்திரி, மிஸ்டர் சர்ச்சில். சென்ற ஞாயிற்றுக்கிழமை, ஜூலை௴ 2௳ மிஸ்டர் சர்ச்சிலின் வேண்டுகோளின்படி, ஜெர்மனியின் அடிமை நாடுகளில் வெற்றி நாளாகக் கொண்டாடப்பட்டது. மிஸ்டர் சர்ச்சிலுடைய வேண்டுகோளும், கர்னல் பிரிட்டனுடைய பிரசங்கமும், "வாரச்செய்திக் குறிப்புகளின்" 9-வது பகுதியில் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

## விமானப்போர் : ஜெர்மனியின் நஷ்டம்.

பிரிட்டிஷ் விமானப்படை தாக்குதல்களினால் ஜெர்மனியின் யுத்த சாமான்கள் உற்பத்தி குறைக்கப்பட்டிருக்கிறது. ரூர் பிரதேசம் கடுமையாகத்தாக்கப்பட்டிருக்கிறது. ஜெர்மனியின் நிலக்கரி, எஃகு, மின்சாரம் முதலியவைகள் உற்பத்தி செய்யும் இந்தப் பிரதேசத்தில் ஜூன்௴ 16௳யிலிருந்து ஜூலை௴ 10௳ வரைக்கும் 2,000 டன் வெடி குண்டுகள் போடப்பட்டன. கலோன் மேல் 1,000 டன், பிரெமென்மேல் 500 டன் வெடி குண்டுகள் வீசப்பட்டன. பிரிட்டிஷ் விமானப்படைக்குப் புதிதானதும் நவீனமுறையில் சிறப்பானதுமான விமானங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பிரிட்டிஷ் விமானங்கள் 6,000 ஜெர்மன் விமானங்களைத் தாக்கி வீழ்த்தியிருக்கின்றன. நேசதேச விமானங்கள் 1,500 ஜெர்மன் விமானங்களை நாசம் செய்திருக்கின்றன. மார்ச்௴ 12௳யிலிருந்து ஜூலை௴ 16௳ வரைக்கும் 250 எதிரிக்கப்பல்கள் விமான வெடி குண்டுகளால் தாக்கப்பட்டு முழுகடிக்கப்பட்டன. ஜூலை௴ 16௳ ராட்டர்டமினுள்ள 22 எதிரிக்கப்பல்கள் பிரிட்டிஷ் விமானங்களால் நாசமாக்கப்பட்டன.

**குறிப்பு.—யுத்த சஞ்சிகையின் பிரதிகளைத் தயவுசெய்து ஒன்றின்பின் ஒன்றாக விடாமல் சேர்த்துவரவும்.**
[சென்னை இன்பர்மேஷன் டைரெக்டர் அவர்களால் அன்புடன் அளிக்கப்பட்டது.]

MADRAS : PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.